முருகப்பெருமான் துணை

**மகான் குகைநமச்சிவாயர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

23.10.2022, ஞாயிற்றுக்கிழமை

1. ஜோதி சூட்சுமம் கண்ட அரங்கா
   சுப்ரமண்யர் ஞானம் அருளி
   விதிமாற்றும் மகத்துவம் பெற்ற
   வேலவனின் அவதார ஞானதேசிகா
2. தேசிகனே உன் பெருமை கூறி
   தெரிவிப்பேன் அனுகூல ஆசி
   ஆசிதனை சுபகிருது துலை திங்கள்
   அறிவிக்க சஷ்டி திகதி கதிர்வாரம்
   (சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 06 ம் நாள் 23.10.2022, ஞாயிற்றுக்கிழமை)
3. வாரமதில் குகைநமச்சிவாயர் யானும்
   வழங்குவேன் உலகோர் நலம்பெற
   சோரமில்லா ஞானவான்கள் தன்னை
   சுத்தநெறி கொண்டு உருவாக்கிவரும்
4. வருகின்ற அரங்கமகா ஞானியரின்
   வல்லமையான ஞான வழிகளுடன்
   தருமத்தின் மார்க்கம் தன்னையும்
   தட்டாது மக்களெல்லாம் ஏற்று
5. ஏற்றுமே உலகமெங்கிலும் பரப்பிட
   எங்கும் ஆறுமுகனார் வழிபாட்டை
   ஆற்றல்பட செய்து வருகவே
   அனைவருக்கும் குருவருள் வழிதனில்
6. வழிதனில் திருவருள் கிட்டி
   வல்லமையான ஞான சித்தியும்
   தெளிவு திடமோடு அழியாமை எனும்
   தெய்வ நிலை யாவரும் அடைந்து
7. அடைந்துமே இந்தப் பேருலகம்
   அனுகிடும் ஞானிகள் வெளிப்பாடாக
   தடையின்றி ஞானிகள் ஆட்சிவரும்
   தருமமிக்க ஞானசித்தர் காலமாக
8. காலமாக மாற்றம் கண்டு
   கண்டுரைப்பேன் உலகம்தனில்
   வேலவன் தலைமை ஏற்றுமே
   வினை வெல்லும் வழிபாடு பெருகி
9. பெருகியே ஞானிகள் நிறைந்த
   பிரபஞ்சமாக சக்தி கூடி
   பேருலகம் அமைதி பாதுகாப்பும்
   பேரிடர் பிற அல்லல் அனுகாத

10. அனுகாத இயற்கை காப்பும்
ஆளுமை அனைத்தும் ஞானமாக
ஞான ஆட்சிக் காலமாகவும்
நல்ல தேற்றம் கூடி அற்புதம்

11. அற்புதம் அரங்னால் நடக்கும்
அரங்கன் சீடர்கள் என
ஏற்புகொண்டு வரும் ஞானவான்களால்
எல்லா மாற்றமும் இனிதே உலகம் அடையும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–